# மக்கள் ஆய்வு

## People Studies

*Multi-Disciplinary Research Institute*

*சார்பாக*

**பேரா. டாக்டர் ச. ராஜநாயகம் & குழு**

*வழங்கும்*

# *சமூகவரைவியல் நோக்கில் தேர்தல் முடிவுகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகள்*

## ராதாகிருஷ்ணன் நகர் இடைத்தேர்தல் கள ஆய்வு முடிவுகள்

*கள ஆய்வு நடந்த நாள்கள்:*
**2017 டிசம்பர் 05-12**

*ஊடகவியலார் சந்திப்பு:*
**13 டிசம்பர் 2017, 10.45 மணி**

*இடம்:*
சென்னை பத்திரிகையாளர் மன்றம்
அரசினர் தோட்டம், சென்னை 600 002

*தொடர்புக்கு:*
மக்கள் ஆய்வு (People Studies)
122 வன்னியர் தெரு, சூளைமேடு, சென்னை 600 094
கிராமிய மக்கள் ஆய்வு & பயிற்சி மையம்
பளியன்குடி விலக்கு, மேலக்கூடலூர் கிராமம், லோயர் கேம்ப், தேனி மாவட்டம்
செல்: **9003182864** (தலைமை அலுவலகம்) / **7299028443** (களப் பணியகம்)
மின்னஞ்சல்: peoplestudies@gmail.com

---

"மக்களை ஆய்வது மக்களுக்காகவே"

# சமூகவரைவியல் நோக்கில்
# தேர்தல் முடிவுகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகள்:

## *டிசம்பர் 2017 இடைத்தேர்தல் பின்புலத்தில்*
## *ராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்றத் தொகுதி குறித்த ஆய்வு*

# Sociographical Enquiry into Factors Impacting on the Electoral Choices:
## *A Study of Radhakrishnan Nagar Assembly Constituency*
## *in the Context of Bye-Election in December 2017*

### *ஆய்வகப் பின்னணி*

“மக்களை ஆய்வது மக்களுக்காகவே” என்ற இலட்சியத்தோடு, களம்சார் ஆய்வுகளில், சிறப்பாக கணிப்பியல் ஆய்வுகளில், கடந்த 2000 முதல் தனித்துவ முத்திரை பதித்துள்ளது மக்கள் ஆய்வு (People Studies). இந்த நூற்றாண்டில் தமிழக அரசியல்-பண்பாட்டுக் களத்தில் நிகழ்வுகளை நுணுக்கமாக ஆய்ந்து தொடர்ந்து பதிவு செய்து வந்துள்ளது.

கணிப்பியலைப் பொருத்தவரை, மக்கள் ஆய்வின் சார்பாகப் பேராசிரியர் டாக்டர் ச. ராஜநாயகம் மேற்கொண்ட அனைத்து ஆய்வுகளுமே மக்களின் எண்ணப்போக்குகளை / திசைகளை மிகத் துல்லியமாக வெளிப்படுத்தியுள்ளன. இதற்குக் காரணம் பேரா. ராஜநாயகத்தின் தனித்துவமான, தமிழ்/இந்தியப் பண்பாட்டில் தோய்ந்த ஆய்வு அணுகுமுறையாகும். நவீனத் தமிழகம் குறித்த மேலாய்வுகளுக்கு (meta-analysis) உதவியாக, அவரின் கணிப்பியல் துறை ஆய்வுகள் “நீரோட்டம்: பண்பாட்டு அரசியலும் அரசியல் பண்பாடும்” என்ற நூலாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

மக்களை மையப்படுத்திய அறிவு-ஆய்வுச் செயல்பாடுகளின் ஓரம்சமாக, தமிழக வாக்காளர்களின் தேர்தல் முடிவுகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகளைச் சமூகவரைவியல் நோக்கில் இனம் காணும் முயற்சியின் தொடர்ச்சியாக, ராதாகிருஷ்ணன் நகர் (ரா.கி.நகர்) இடைத்தேர்தல் களத்தில் தற்போதைய ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

### *களஆய்வுப் பின்னணி*

முதலமைச்சர் ஜெயலலிதாவின் மரணத்தைத் தொடர்ந்து கடந்த ஏப்ரல் மாதம் அறிவிக்கப்பட்ட ராதாகிருஷ்ணன் நகர் இடைத்தேர்தலில், உள்கட்சிப் பிரச்சனைகளால் சின்னம் முடக்கப்பட்டு, மூன்று பிரிவுகளாக அதிமுக-வினர் நின்ற நிலையில், நுட்பமான களஆய்வு ஒன்றை மக்கள் ஆய்வு (People Studies) மேற்கொண்டது. கடைசிநேரத்தில் தேர்தல் ஆணையம் ஒத்திவைத்த அந்தத் தேர்தல், தற்போது முற்றிலும் மாறுபட்ட சூழலில் நடைபெற இருப்பதால், அதன் அரசியல் முக்கியத்துவம் கருதி தற்போதைய ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மொத்தம் 27 பேர் கொண்ட ஆய்வுக்குழுவினர், தொகுதியின் அனைத்து வாக்குச் சாவடிகளையும் உள்ளடக்கி, 156 தெருக்களில் 3120 வாக்காளர்களைச் சந்தித்தனர். டிசம்பர் 05 பிற்பகல் முதல் 12 முற்பகல் வரை, பேரா. ராஜநாயகத்தின் நேரடி வழிநடத்துதலில், *சமூக-உளவியல் அணுகுமுறையை* (social-psychological approach) பின்பற்றி, மக்களின் எண்ண ஓட்டங்கள் பதிவு செய்யப்பட்டன. நுணுகி நோக்குதல், அருகமைந்து செவிமடுத்தல் (non-intrusive listening) கலந்துரையாடுதல், “மனம்விட்டுப்” பேசுதல், உள்ளிணைந்த மொழியைப் பயன்படுத்துதல், உணர்ச்சிப்பூர்வ கருத்துவெளிப்பாடு மற்றும் உடல்மொழி ஆகியவற்றை வீடியோ பதிவுசெய்தல் முதலிய பண்பியல் (qualitative) உத்திகளும், நிரல்படுத்தப்பட்ட வினாத்தொகுப்பு உதவியுடன் உரையாடல் மூலம் தரவுகள் சேகரிக்கும் எண்ணியல் (quantitative) உத்திகளும் பிரதானமாகப் பயன்படுத்தப்பட்டன. இவற்றை ஒருங்கிணைத்து (triangulation) இறுதிமுடிவுகள் எட்டப் பட்டுள்ளன.

## பங்கேற்றோர் பின்னணி

ஆண்களும் பெண்களும் ஏறத்தாழச் சம அளவில் இந்த ஆய்வில் பங்கேற்றனர் (பெண்கள் - 50.5, ஆண்கள் - 49.5). *வயதுரீதியாக:* வயது 25 வரை - 16.1, வயது 26 முதல் 35 வரை - 28.0, வயது 36 முதல் 45 வரை - 34.0, 46 முதல் 60 வரை - 16.9 (மீதி - வயது 60-க்கு மேல்). *கல்விரீதியாக,* படிக்காதவர்கள் மற்றும் ஆரம்பக் கல்விவரை - 33.0, வகுப்பு 6 முதல் 12 வரை - 35.7, கல்லூரி அல்லது தொழிற்கல்வி - 30.3. *தொழில்ரீதியாக,* கூலி வேலை மற்றும் மீன்பிடித் தொழில் செய்வோர் - 14.7, சொந்தத் தொழில் செய்வோர் - 18.1, தனியார் நிறுவனங்களில் பணிபுரிவோர் - 14.9, அரசு ஊழியர் - 2.2, இல்லத்தரசிகள் - 32.5, மாணவர்கள் - 10.2, வேலையில்லாதோர் - 4.2, ஓய்வுபெற்றோர் - 2.0. *சாதிரீதியாக,* தாழ்த்தப்பட்டோர் - 27.8, மிகவும் பிற்படுத்தப் பட்டோர் - 35.5, பிற்படுத்தப்பட்டோர் - 18.4 (மீதி - பிற (உயர்) சாதியினர் / தகவல்தர விரும்பாதோர்). *மதரீதியாக,* இந்துக்கள் - 86.1, கிறிஸ்தவர் - 9.4, இஸ்லாமியர் - 3.0 (மீதி - பிற மதத்தினர் / பதில் தெரிவிக்காதோர்).

## ஆய்வு முடிவுகள்

### *(1) ஏப்ரல் தேர்தல் - ஒரு மீளாய்வு:*

கடந்த ஏப்ரலில் அறிவிக்கப்பட்டபடியே தேர்தல் நடந்திருந்தால், பெரும்பான்மையான வாக்காளர்களின் ஆதரவு டிடிவி. தினகரனுக்குச் சென்றிருக்கும் என்பது வெளிப்படுகிறது. யார் வெற்றி பெற்றிருப்பார் என்ற யூகத்தைப் பொருத்த அளவிலும் டிடிவி. தினகரனே முன்னிலை பெற்றுள்ளார். கடந்த ஏப்ரலில் மக்கள் ஆய்வு மேற்கொண்ட கணிப்பு முடிவுகளுடன் இப் பதில்கள் பேரளவு ஒத்துப்போகின்றன.

| | **ஏப்ரலில் யாருக்கு வாக்களித்திருப்பீர்கள்? (யூகம்)** | **ஏப்ரலில் யார் வெற்றிபெற்றிருப்பார்? (யூகம்)** | **இன்று வாக்களிப்பதாக இருந்தால் யாருக்கு வாக்கு? (ஏப்ரல் கணிப்பு)** |
|---|---|---|---|
| டிடிவி. தினகரன் | 38.2 | 43.5 | 35.4 |
| மருது கணேஷ் | 27.0 | 25.6 | 25.9 |
| மதுசூதனன் | 18.3 | 19.0 | 20.6 |

### *(2) "சின்ன" அரசியல்:*

வேட்பாளரின் சின்னத்தையும் சம்பந்தப்பட்ட வேட்பாளரின் பெயரையும் சரியாகப் பொருத்துவதில், **பிரஷர் குக்கர் - டிடிவி. தினகரன் இணை** மிகப் பெரும்பான்மையோரால் **(91.6)** அடையாளம் காணப்படுகிறது.

| | |
|---|---|
| பிரஷர் குக்கர் - டிடிவி. தினகரன் | 91.6 |
| இரட்டை இலை - மதுசூதனன் | 81.1 |
| உதய சூரியன் - மருது கணேஷ் | 77.8 |
| மெழுகுவர்த்திகள் - கலைக்கோட்டுதயம் | 14.2 |
| தாமரை - கரு. நாகராஜன் | 10.4 |

தேர்தல் சின்னத்தின் முக்கியத்துவம் குறித்துப் பல்வேறு கருத்துக்கள் நிலவும் சூழலில், இது குறித்த ரா.கி.நகர் வாக்காளர்களின் எண்ணங்கள் கவனிக்கப்பட வேண்டியவையாகின்றன:

(அ) பிரஷர் குக்கர் சின்னம் அறிவிக்கப்பட்ட ஓரிரு நாள்களிலேயே ஏறத்தாழத் தொகுதி முழுவதுமே அது சென்று சேர்ந்துள்ளது.

(ஆ) ஆனால் கடந்த ஏப்ரலில் டிடிவி. தினகரனின் சின்னமாக இருந்த தொப்பி இப்போது அவருடையதில்லை என்பதை அறிந்துள்ள வாக்காளர்கள், அதே தொப்பிச் சின்னத்தில் தற்போது போட்டியிடும் வேட்பாளர் ரமேஷை அறியவில்லை.

(இ) சின்னங்களைக் கட்சிகளோடு அல்லது கட்சித் தலைவரோடு பொருத்திப் பார்க்கும் வாக்காளர்கள் பலருக்கு களத்தில் நிற்கும் அக் கட்சி வேட்பாளரைத் தெரியவில்லை.

மேற்கண்ட எதார்த்தங்களின் பின்னணியில், வெகுஜன மற்றும் சமூகவலைத்தள செய்தி ஊடகங்களின் பெருக்கம் வகிக்கும் பங்கு என்ன? பிரச்சார உத்திகளின் பங்கு என்ன? ஆகிய கேள்விகள் தொடர் ஆய்வுக்கு உரியன.

### *(3) வேட்பாளர் திறனாய்வு:*

வேட்பாளர்களின் ஆளுமை குறித்த பல்வேறு அம்சங்களைத் திறனாய்வுக்கு உட்படுத்தும் தொகுதி மக்களின் மதிப்பீட்டில் முன்னிலை பெறும் அய்ந்து வேட்பாளர்கள் பற்றிய விவரம்.

| | அறிவாற்றல் | துணிச்சல் | நிர்வாகத் திறன் | துடிப்பான செயல்பாடு | ஊடகச் சந்திப்பு | வெகுஜன உறவு | சமூக அக்கறை |
|---|---|---|---|---|---|---|---|
| *டிடிவி தினகரன்* | 72 | 89 | 80 | 85 | 87 | 75 | 70 |
| *மருது கணேஷ்* | 68 | 65 | 61 | 75 | 70 | 72 | 64 |
| *மதுசூதனன்* | 61 | 42 | 70 | 68 | 66 | 63 | 45 |
| *கலைக்கோட்டுதயம்* | 54 | 51 | 50 | 52 | 43 | 53 | 55 |
| *கரு நாகராஜன்* | 34 | 30 | 33 | 31 | 30 | 32 | 35 |

அறிவாற்றல், பிரச்சனைகளைத் துணிவோடு சந்திப்பது, நிர்வாகத் திறமை, துடிப்பாகவும் விரைவாகவும் செயல்படுவது, ஊடகங்களைத் தயங்காமல் எதிர்கொள்வது, வெகுஜனங்களோடு நல்லுறவு பாராட்டுவது, சமூக அக்கறை ஆகிய பண்புநலன்களில் ஒப்பீட்டளவில் டிடிவி. தினகரன் முதலிடத்தில் இருக்கிறார். கலைக்கோட்டுதயம், நாகராஜன் ஆகியோரைப் பொருத்த வரையில், தொகுதி மக்களுக்குப் பரவலாக அறிமுகமாகாத காரணத்தால் அவர்களுடைய ஒட்டுமொத்தச் சராசரி மதிப்பெண் குறைந்துள்ளது.

### *(4) ஆட்சி குறித்த மதிப்பீடு:*

**(அ) அதிமுக ஆட்சி:** கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கும் மேலாகத் தமிழ்நாட்டில் நடைபெறும் அதிமுக ஆட்சியைக் குறித்து ரா.கி.நகர் தொகுதி மக்களில் ஏறத்தாழ நான்குக்கு மூன்று பேர் அதிருப்தியை வெளிப்படுத்துகின்றனர்.

| | |
|---|---|
| அதிமுக ஆட்சி மோசம் | **73.3** |
| சிறப்பு | **4.5** |
| சொல்லிக்கொள்ளும்படி எதுவுமில்லை | **22.1** |

**(ஆ) பாஜக ஆட்சி:** மத்தியில் நடைபெறும் பாஜக ஆட்சி குறித்து தொகுதியில் நிலவும் அதிருப்தி மிகக் கடுமையாக உள்ளது. அதிமுக ஆட்சி மீதுள்ள அதிருப்தியை விடவும் இது அதிகமாக இருப்பது கவனிக்கத்தக்கது.

| | |
|---|---|
| மத்தியில் பாஜக ஆட்சி மோசம் | **85.6** |
| சிறப்பு | **6.2** |
| சொல்லிக்கொள்ளும்படி எதுவுமில்லை | **7.9** |

**(இ) ஒகி புயல்:** மத்திய, மாநில அரசுகள் ஒகி புயலைக் கையாண்ட விதம், தொகுதியில் ஒருவருக்கும் நிறைவைத் தருவதாக இல்லை. பலருடைய பதில்களில் கடுங்கோபம் வெளிப்பட்டது.

| | |
|---|---|
| புயலைக் கையாண்ட விதம் மோசம் | **93.5** |
| சொல்லிக்கொள்ளும்படி எதுவுமில்லை | **6.5** |
| சிறப்பு | **0** |

*(5) இன்று வாக்களித்தால்...:*

தொகுதியின் தற்போதைய சூழலில், இன்று வாக்களிப்பதாக இருந்தால் சுயேட்சை வேட்பாளராகக் களமிறங்கியுள்ள டிடிவி. தினகரன் மற்றவர்களை விட அதிக ஆதரவுடன் முதலிடத்தில் உள்ளார்.

| | |
|---|---|
| டிடிவி. தினகரன் | 35.5 |
| மருது கணேஷ் | 28.5 |
| மதுசூதனன் | 21.3 |
| கலைக்கோட்டுதயம் | 4.6 |
| கரு. நாகராஜன் | 1.5 |
| மற்ற வேட்பாளர்கள் | 0.5 |
| நோட்டா | 4.2 |
| முடிவுசெய்யவில்லை | 3.9 |

*(6) தேர்தல் ஆணையத்தின் செயல்பாடு:*

தேர்தல் ஆணையம் நடுநிலையோடு செயல்படவில்லை என்பதே தொகுதியின் பரவலான கருத்து. செயல்பாடு மோசம் - 64.8, சிறப்பு - 18.0, சொல்லிக் கொள்ளும்படி எதுவுமில்லை - 17.2

*(7) அரசியல் செய்திக்கான ஊடகம்:*

அரசியல் செய்திக்கான முதன்மை ஊடகமாக ரா.கி.நகர் வாக்காளரின் ஏகோபித்த வரவேற்பைப் பெற்றிருப்பது தொலைக்காட்சி (85.6). இளைஞரிடம் கூட தொலைக்காட்சியே பெரும் செல்வாக்குச் செலுத்துகிறது. பிற ஊடகங்களைப் பொருத்த அளவில், அச்சடிக்கப்பட்ட செய்தித்தாள் (8.9), கைபேசி (3.2) ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

*(8) சினிமா-அரசியல்:*

தனக்குப் பிடித்தமான, சமூக அக்கறையுள்ள நடிகர் வரிசையில் முதலிடம் விஜய்க்குச் செல்கிறது. நேரடி, முழுநேர அரசியலுக்கு வந்தால் வரவேற்கப்படும் நடிகர்கள் வரிசையில் விஷாலுக்கு முதலிடம் கிடைக்கிறது.

| தனக்குப் பிடித்தமான சமூக அக்கறையுள்ள நடிகர் | |
|---|---|
| விஜய் | 18.7 |
| விஷால் | 14.2 |
| ரஜினி | 9.8 |
| கமல் | 8.5 |
| அஜித் | 6.3 |

| முழுநேர அரசியலுக்கு வந்தால் வரவேற்பு பெறும் நடிகர் | |
|---|---|
| விஷால் | 15.2 |
| விஜய் | 11.3 |
| கமல் | 10.7 |
| அஜித் | 5.6 |
| ரஜினி | 5.1 |

சென்னை பத்திரிகையாளர் மன்றம்
அரசினர் தோட்டம், சென்னை 600 002

பேரா. டாக்டர் ச. ராஜநாயகம்
& குழுவினர், மக்கள் ஆய்வு
13 டிசம்பர் 2017

*கவனத்திற்கு:* (1) மக்கள் கருத்துக்களைத் தெரிவிக்கப் பயன்படுத்தியுள்ள எண்கள் அனைத்தும் சதவீதத்தைக் குறிக்கின்றன. (2) கேள்விக்கான பதில்களில் முக்கியமானவை மட்டும் பட்டியலிடப்பட்டுள்ளதால், சதவீதங்களின் கூட்டுத்தொகை 100-ஐ விடக் குறைவாக இருக்கலாம்.

© People Studies, April 2017. No part / aspect of this Research Report may be used for purposes other than genuine journalistic reporting without written permission from People Studies.

## நீரோட்டம்:
### அரசியல் பண்பாடும் பண்பாட்டு அரசியலும்

*கள ஆய்வுகளில் 21-ஆம் நூற்றாண்டுத் தமிழகம்*

*வெறுமனே தேர்தலை முன்வைத்த கணிப்புகளுக்கு மாறாக, தேர்தல் பின்புலத்தில் மக்களை மையப்படுத்திய, நேர்மையான, நடுநிலையான, நம்பகமான, வெளிப்படையான, துணிச்சலான களஆய்வுகளாக இருப்பதால், வரலாறு வரைவுக்கான மூல ஆவணங்களில் நீரோட்டம் என்ற இந்த நூலும் ஒன்றாகத் திகழ்கிறது.*

*இந்த நூற்றாண்டில் இதுவரை தமிழகம் / தமிழர்கள் பயின்று வந்துள்ள பாதைகள், பார்வைகளின் திசைகள், உந்து விசைகள், எதிர்கொண்டுள்ள சவால்கள் / சவடால்கள், அவற்றின் பின் உறைந்துள்ள / சிதைந்துள்ள வரலாறுகள், பண்பாட்டு ஆணிவேர்கள் / எச்சங்கள், அரசியல் கணக்குகள் / பிணக்குகள், தேர்தல் சூத்திரங்கள் / சாத்திரங்கள், ஊடகச் சித்து விளையாட்டுக்கள்... என நிகழ்கால வரலாறு வரைவியலின் அனைத்து அம்சங்களையும் ஒருங்கே திரட்டித் தருகிறது.*

*ஆய்வாளர்கள், அரசியல் நோக்கர்கள், அரசியல்வாதிகள் தமிழகப் பண்பாடு-அரசியல் பரிணாமங்களை இன்னும் சற்று நெருங்கிச் சென்று புரிந்துகொள்ள மேலாய்வு செய்வதற்கான தரவுகளின் பெட்டகமாக விளங்குகிறது.*

*மக்கள் பெயரைச் சொல்லி / மக்களை அணுகி மேற்கொள்ளப்படும் ஆய்வு எத்தகையதாக இருந்தாலும் அந்த ஆய்வின் முடிவுகளை அறிந்து கொள்ளும் உரிமை ஆய்வுசெய்யப் பயன்படுத்தப்பட்ட மக்களுக்கு உண்டு. அவ்வாறே, வெகுமக்கள் எளிதில் அறிந்து கொள்ளத்தக்க விதத்தில் ஆய்வுகள் குறித்த விவரங்களை வெளிப்படையாக வைத்திருக்க வேண்டிய கடமை ஆய்வாளருக்கு உண்டு. இத்தகைய கருத்தியல் பின்னணியில், "மக்களை ஆய்வது மக்களுக்காகவே" என்ற கொள்கைவாக்கை மெய்ப்பிக்கும் மற்றொரு முயற்சி நீரோட்டம்.*

*ஆசிரியர்:* ***ச. ராஜநாயகம்*** */ வெளியீடு:* ***மக்கள் ஆய்வகம்*** */* ISBN: 978-81-910217-9-0

---

## POPULAR CINEMA AND POLITICS IN SOUTH INDIA
### REIMAGINING MGR AND RAJINIKANTH

This work breaks new ground in the understanding of South Indian cinema and politics. Through incisive analysis and original concepts it illustrates the private, public and cinematic personas of MGR and Rajinikanth. It challenges the popular and scholarly myths surrounding them and shows the constant negotiation of their on-screen and off-screen identities. The book revisits the entire political history of post-Independent Tamil Nadu through its cinema, and presents a refreshing psycho-political and cultural map of contemporary South India. Replete with illustrative diagrams and graphs that lay bare the tropes of South Indian films, this work will be a major intervention in the understanding of Indian cinema.

This absorbing volume will be an important read for scholars, teachers and students of film studies, culture and media studies, and politics, especially those interested in South India.

***Author:*** **S. Rajanayagam /** ***Publisher:*** **Routledge /** ***ISBN:*** **978-1-13-882203-0**
*Visit:* http://www.routledge.com/books/details/9781138822030

---